★ போரில் விமானங்கள், ஹெலிகளை இழந்தோம்

# ஜெனரல் சிறில் ரணதுங்கா

(கொழும்பு)

ஆனையிறவு இராணுவ முகாமை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கும் முயற்சியின் போது, போர் விமானங்களையும், ஹெலிகொப்டர்களையும் நாம் இழந்துவிட்டோம். எனினும் வடபகுதி நோக்கி இராணுவம் முன்னேறும் முயற்சியில் இருந்து நாம் பின்வாங்க மாட்டோம்.

[4-ம் பக்கம் பார்க்க]

-8-1991
பகுதி

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 3 இதழ் 189
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19-8-1991

## புலிகளை தேட பொலிசார் வைத்தியரையும் அழைத்துச் செல்கின்றனர்

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தேடுதல் நடத்தும் பொலிஸார், தம்முடன் வைத்தியர்களையும்

(4ம் பக்கம் பார்க்க)

## சிவராஜன் தப்பிவிட்டதாக 'இந்தியா ருடே' தகவல்

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த சிவராஜன் இந்தியாவில் இருந்து தப்பியோடிவிட்ட

(4ம் பக்கம் பார்க்க)

### மனித உரிமை மீறல்களைக் கண்டித்து

# இலங்கைக்கான நிதி உதவிகளை பிரிட்டிஷ் அரசு நிறுத்திவிட்டது!

## லண்டன் 'சண்டே ரைம்ஸ்' தகவல்

(லண்டன்)

**மூன்றும் உலக நாடுகளில் மனித உரிமை மீறல்களில் இலங்கை மிக மோசமாக ஈடுபட்டு வருவதைக் கண்டித்து இலங்கைக்கு மேலும் நிதிஉதவிகளை வழங்குவதில்லையென பிரிட்டிஷ் அரசு முடிவு செய்துள்ளது.**

**பிரிட்டனின் வெளிநாட்டு உதவிகளுக்கான அமைச்சர் திருமதி லிண்டா சோக் நேற்றைய லண்டன் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு இத்தகவலைத் தெரிவித்துள்ளார்-**

இதேவேளையில் மனித உரி உட்பட மூன்றும் உலக மைகளை மீறும் இலங்கை நாடுகளுக்கு நிதி உதவிகளை வழங்குவதில்லையென்ற பிரிட்டிஷ் அரசின் முடிவுக்கு ஐரோப்பியநாடுகளின் ஒத்துழைப்பை பெறுவதென்று பிரிட்

[4ம் பக்கம் பார்க்க]

## இந்தியாவில் புலிகளின் நடவடிக்கைகளை ஆராய கோரிக்கை

(புதுடில்லி)

இந்தியா முழுவதிலும் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் மற்றும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட

[4-ம் பக்கம் பார்க்க]

## திருச்சியில் தொடர்புநிலையம் பொலிசாரால் முற்றுகை

(சென்னை)

திருச்சி செட்டிப்பாளையத்தில் இயங்கிவந்த தகவல் தொடர்பு நிலையம் ஒன்று பொலிசாரால் முற்றுகையி

[4-ம் பக்கம் பார்க்க]

## றெனிடிமெல்லின் வங்கி மோசடிகள் அம்பலம்

[கொழும்பு]

முன்னாள் நிதியமைச்சர் றெனிடி மெல்லின் வங்கி மோசடிகள் தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

மத்திய வங்கி, இங்கிலாந்து வங்கி ஆகியன அளித்த ஆரம்ப ஆலோசனைக்குமாறாக முறிந்து போனபி.ஸி.ஐ.வங்கிஇலங்கையில்புகுந்துகொண்டது. அத்துடன் இந்த வங்கிக்கு இலங்

(4-ம் பக்கம் பார்க்க)

## அடுத்த சில வாரங்களில் வடக்கில் ராணுவ நடவடிக்கை

### தளபதி ஹமில்டன் வனசிங்கா அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் வடபகுதியில் விரைவில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார். அடுத்த சில வாரங்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

## பத்து லட்சம் விண்ணப்பப் படிவங்கள்

(கொழும்பு)

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், பத்து லட்சம் கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவங்களை அச்சடிக்க உள்ளது.

கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துவருவதைக் கவனத்திற் கொண்டு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் இந்த ஏற்பாட்டைச்செய்துள்ளது.

## கர்நாடகத்தில் 12 பேர் சயனைட் அருந்தி தற்கொலை

[பெங்களூர்]

கர்நாடக மாநிலத்தில் தீவிரவாதிகளை தேடும் பணியில் பொலிசார் ஈடுபட்டபோது, மண்டியா மாவட்டத்திலுள்ள இரண்டு கிராமங்களில் 12பேர் சயனட் உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டனர்.

இரண்டு கிராமங்களிலும் தலா 6 போராளிகள் இருந்தனர் என்றும் கைதுசெய்யும் வேளை 'சயனட்' உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

[4-ம் பக்கம் பார்க்க]

## முள்ளியானில் மோதல்

(கொழும்பு)

ஆனையிறவு இராணுவ முகாமிற்கும் முள்ளியான் என்னும் இடத்திற்கும் இடையில் விடுதலைப் புலிகளுக்கும் அரச துருப்புகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் மோதல்

(4ம் பக்கம் பார்க்க)

## கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை அ. தி. மு. க. கைவிட்டது

[சென்னை]

''மத்திய அமைச்சர்களான ப. சிதம்பரம், அருணாசலம் ஆகியோருக்கு எதிரான எந்த ஒரு கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்திலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் ஈடுபடமாட்டார்கள்.''

தமிழக முதல்வரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா நேற்றுச் சென்னையில் பத்திரிகையாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

[4ம் பக்கம் பார்க்க]

## அமைச்சர் சிதம்பரத்துக்கு கறுப்பு பூனைகள் பாதுகாப்பு

(புதுடில்லி)

இந்திய வர்த்தக இணையமைச்சர் திரு. ப. சிதம்பரத்திற்கு கறுப்புப் பூனைகளின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

திரு சிதம்பரம் மற்றும் இந்திரா காங்கிரஸ் தொண்டர்களும் அண்மையில் தமிழகத்

(4-ம் பக்கம் பார்க்க]

## சிட்னி பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்பிக்க ஏற்பாடு

(சிட்னி)

சிட்னி பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி கற்பிக்கப்படவுள்ளது.

இந்திய ஆய்வுத்துறைபணிப்பாளர் பேராசிரியர் எஸ். என். முகர்ஜி இம் மாதத்திலிருந்து இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிய டாக்டர் ஆ. கந்தையா தமிழ் விரிவுரைகளை நிகழ்த்துவார்.

## இடைநிறுத்தம்

(கொழும்பு)

மக்கள் வங்கி, இலங்கை வங்கிக் கிளைகள் புதிதாகத் திறக்கப்படுவது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## நல்லூரில் மீரா நாவல்

பரிசளிக்கக்கூடியவை இன விடுதலையை மையமாக எழுதப்பட்ட சங்கரன், அக்கினி, முள்முடி மன்னர்கள், சிறுவர்களுக்கு ''இராவணன் கோட்டை'' இன்னும் உயிரோட்டமான பத்து ''மீரா நாவல்களும்'' விற்பனையாகின்றது. [சி-5114]

## வியாழ மாற்றம்

(14-8-91) வியாழமாற்றமும், (22-8-91) செவ்வாய் மாற்றமும் எல்லா ராசிகளின் பலன்களும் புதிய வெளியீடு ரூ. 6/50 எங்கும் கிடைக்கும், ரகுநாதன் பதிப்பகம், நவீன சந்தை, யாழ்ப்பாணம். நூலாசிரியர் Prof.- சத்தியதாசன், ஞானம்ஸ் சித்தன்கேணி. (சி-5112)

## பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்கள் சஞ்சிகைகள் விலைக்கு வாங்குவோம். புத்தகக்கடை கல்வியங்காடு. (சி-5127)

## சோயா அவரை

சோயா அவரை தொகையாகவோ சில்லறையாகவோ கொள்வனவு செய்யப்படும். அண்ணா தொழிலகம், இணுவில். (எ 1499)

## தையல் பயிற்சி நிலையம்

(கொழும்புத்துறை)

யாழ். தொழில் திணைக்களத்தினால் நடத்தப்படும் தையல் பயிற்சி நிலையம் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

## துறைமுக அபிவிருத்தி

[கொழும்பு]

பருத்தித்துறை துறைமுக அபிவிருத்த வேலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி வேலைகள் பற்றி விரைவில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமபடி வ. பகுதியில் அத்தியாவசிய சேவையாளர் நாயகம் திரு. நேசையாவிடம் பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது. (வி)

## அகதிகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில அகதிகள் முகாமகளில் தங்கியிருக்கும் அகதிகள், நாவற்குழி பகுதியில் அமைக்கப்பட்டுவரும் வீடுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட டுவருகின்றனர்.

செஞ்சிவைச்சங்கத்தினால் நாவற்குழி, அராலிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுவரும் ஆயிரம் வீடுகளில் நாவற்குழியில் 250 வடுகள் தற்போது கட்டிமுடிக்கப்பட்டிருப்பதால் அந்த வீடுகளுக்கு இந்த அகதிகளை இடமாற்றம் செய்யும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. (வி)

## ச. ச. நிலையங்கள் உதவி

(பண்டத்தரிப்பு)

பிரான்பறறு சிற்றூரவையும் பிரான்பற்று சரஸ்வதி சனசமூக நிலையம், பிரான பற்று நாவலர் சனசமூகநிலையம் ஆகியனவும் இணைந்த பிரான்பற்றுபகுதி மககளிடமிருந்து 40 இளநீர்க்குலைகள், 500 சாககுகள், 275 உரப்பைகள் என்பனவற்றை விடுதலைப் போராளிகளுக்கு பண்டத்தரிப்பு பிரதேச அலுவலகப் பொறுப்பாளர் மூலம் வழங்கியுள்ளன. (72)

## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு.

வேலுப்பிள்ளை செல்லையா

அவர்கள்

தோற்றம்: 08 - 05 - 1922

மறைவு: 19 - 08 - 1989

திதி: 28-08-1991

ஈராண்டு கழிந்தாலும் எங்கள் நெஞ்சில்
எள்ளளவும் அழியாத சிலையாய்க் காண்போய்
பேரான சரசாலை ஊரில் தோன்றிப்
பெரியோனாய் பேருலகு மதிக்க வாழ்ந்தோய்
பாரான கழனிசூழ் பரந்த னூரில்
பயன் கொளிக்கும் பெருநிலத்துச்
சுவாமிய் வாழ்ந்து
சீரான ஆலயமும் அமைத்துக் காத்த
செல்லைய நாமனினை அஞ்சல் செய்வோம்.

பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள், சகோதரர்,
மைத்துனர், மருமக்கள், பேரர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

20, தபால் நிலைய வீதி,
சாவகச்சேரி.

[சி 5138]

## இராசி பலன்

19-08-1991
திங்கட்கிழமை
தமிழுக்கு ஆவணி 03

தசமி முழுவதும்: கேட்டை பி. இ 1-19 வரை: சித்த யோகம். ராகு காலம் காலை 7-35 முதல் 9-05 வரை. சுப நேரம் பகல் 12-05 முதல் 1-35 வரை.

மேடம்: பணப் புளக்கம், வாக்கு வன்மை, மன அமைதி

இடபம்: தொழில் முடக்கம், வீண்வாதம், குடும்பப் பிரிவு.

மிதுனம்: குடும்ப மகிழ்ச்சி, இனசன உறவு, காரிய சித்தி.

கடகம்: தொழில் மாற்றம், அதிகாரம், வெற்றிக்களிப்பு.

சிங்கம்; குடும்ப விவகாரம், தடுமாற்றம், குழப்பம்.

கன்னி: போட்டி மனப்பான்மை, விரக்தி நிலை, வெறுப்பு.

துலாம்: காரிய வெற்றி, ஆடம்பரச் செலவு, புகழ்.

விருச்சிகம்: குடும்பக் கஷ்டம், பகைவர் துன்பம், உடல நலம் பாதிப்பு.

தனுசு: மனத் திருப்தி, வேலைப்பளு, பிரயாசை.

மகரம்: அதிகாரிகள் துன்பம், தொழில் கஷ்டம், கடன்.

கும்பம்: வைத்தியச் செலவு, உடல் சோர்வு, அலைச்சல்.

மீனம்: அதிர்ஷ்ட வாய்ப்பு, தயாள குணம், குடும்ப உல்லாசம்.

- ஜோஸ்யர்

## 16-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிரம்மஸ்ரீ பொ. குருசாமிஐயர்

[ஆலய பரிபாலகர், நுணுவில்குளம் கண்ணகை அம்மன் கோவில்]

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று காலை 8-00 மணிக்கு அம்மன் கோவிலில் விசேட அபிஷேக ஆராதனை நடைபெறும் என்பதனை அன்பர்கள், அடியார்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

கு. சிவகடாச்ச சர்மா
(மகன்)

நுணுவில்.

(சி 5140)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பெனடிற் டனிசியஸ்
(சின்னத்தம்பி)
(கட்டிட ஒப்பந்தகாரர்)

தோற்றம்: 20 - 05 - 1938

மறைவு: 20 - 07 - 1991

எங்கள் குடும்பத்தின் குணக்குன்றே,
அன்புத்தெய்வமே!
உங்கள் மரணப் பிரிவினால் ஏங்கிப் பரிதவித்து
துடிதுடித்துக் கண்ணீர் சொரியும்:

மனைவி, மக்கள், தாய்,
சகோதர, சகோதரிகள், மைத்துனர்கள்,
மாமன், மாமிமார், உற்றார், உறவினர்கள்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக றக்கா வீதியிலுள்ள புனித திரேசா ஆலயத்தில் 19-8-1991 (இன்று) திங்கட்கிழமை காலை 6-30 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்னாரின் ஈமக்கிரிகையில் பங்குகொண்ட சகலருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

21, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.

[சி 5123]

# வடக்கு, கிழக்கு இராணுவ நடவடிக்கையால்
# நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு

நாம் இராணுவ நடவடிக்கையால் இராணுவச் செலவையே கணக்கில் போடுகிறோம். உண்மையில் வடபகுதியில் இராணுவநடவடிக்கையால் கைத்தொழில், மீன்பிடி, விவசாயம் போன்றவை பாதிப்புற்றதனாலும் நாம் பலவழியால் பொருளாதாரத்தில் பாதிப்படைந்துள்ளோம்.

இவ்வாறு சண்டே ரைம்ஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: 1983-ம் ஆண்டு வரை 298,000 மெற்றிக்தொன் சிமெந்தை உற்பத்தி செய்த காங்கேசன்துறை சிமெந்து ஆலை பிற்பாடு 279,000 மெற்றிக்தொன் சிமெந்தை உற்பத்தி செய்தது. சென்ற வருடம்நாட்டில் 17,000 மெற்றிக தொன் சிமெந்தே உற்பத்தி செய்யப்பட்டது. காங்கேசன்துறை சிமெந்து உற்பத்தி இல்லாமற் போனதே இவ்வுற்பத்திச் சரிவுக்குகாரணமாகும்.

### இல்மனைற் உற்பத்தி

இதேபோல் புல்மோட்டையிலுள்ள கனியமணல் கூட்டுத்தாபனம் 1977-ல் 132,000 மெற்றிக்தொன் இல்மனைற்றை உற்பத்தி செய்தது. ஆனால் 1987 இல் 70,000 மெற்றிக் தொன்களேஉற்பத்தியாகியது. இராணுவ நடவடிக்கையே இவ்வுற்பத்தி வீழ்ச்சிக்கு காரணம் என கூறப்படுகிறது.

### காகித தொழிற்சாலை

வாழைச்சேனை காகித ஆலை 1987-ல் 27,000 மெற்றிக்தொன் காகிதங்களை உற்பத்தி செய்துவந்து. தற்போதைய நிலமை காரணமாக சென்ற வருடம் 19,000 மெற்றிக் தொன்களையே உற்பத்தி செய்தது. இதனால் 50 சதவீத உற்பத்தியை இழந்துவிட்டோம். வடபகுதியில் உற்பத்தியாகிய உப்பு, யுத்தநிலமை காரணமாக 64 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

### மீன்பிடித்தொழில்

வட-கிழக்கு யுத்தநிலமை காரணத்தால் மீன்பிடித் தொழிலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந் நிலவரம் 1983 இலிருந்து இக் காலம்வரை பாதித்து நாட்டுக்கு கிடைக்கும் கடல்வள மீனுற்பத்தி கிடைக்காமல் போகவும், வடக்கு-கிழக்கில் பரந்து கிடக்கும் கடல்வளம் பயன்படாமல் போகவும் ஏதுவாக அமைந்துள்ளது. இந்த இழப்பீடு பலவாறாக மதிப்பிடப்பட்டுள்ளது.

### விவசாய உற்பத்தி

விவசாயத்தை எடுத்துக் கொண்டால் யாழ் குடாநாட்டில் அரும்பாடு பட்டு விவசாயம் செய்யும் நிலங்களும் தரிசாகப் போய்விட்டன. உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டதனால் ஜீவனத்தை நடத்த கமக்காரர் சொற்ப நிலங்களைத்தான் விவசாயம் செய்கின்றனர்.

உரம், மண்ணெண்ணை தட்டுப்பாட்டினால் கமக்காரர் அதன் பயன்பாட்டைக் குறைக்கவேண்டியதன் அவசியம் ஏற்பட விளைவும் விநியோகமும் குறைகின்றது.

### உற்பத்திப் பொருட்கள்

கமக்காரர் இங்கு செய்யும் உற்பத்தி விளை பொருட்களை தென்பகுதிக்கு எடுத்துவரும் முயற்சியில் ஏற்படும் அபாயங்களும், தடங்கல்களும் காரணமாக அப்பொருட்களின் விலையில் ஏற்றம் காணப்படுகிறது. இதனால் தென்பகுதியில் வடபகுதி உற்பத்திப் பொருட்களின் நாட்டம் குறைகிறது. அவற்றை அனுப்புவதிலும் விவசாயிகளுக்கு சலிப்பு ஏற்படுகிறது. இதனால் உள்ளூரில் விலைபோகும் உற்பத்திகளைச் செய்து அவற்றை அங்கேயே சந்தைப்படுத்தியும்வருகிறார்கள்

போர்தொடர்வதால் அதன் பாதிப்பு மீன்பிடி, கைத்தொழில், விவசாயம் ஆகியவற்றோடு மட்டும் நின்றுவிடாமல போர் செலவினத்தையும் அதிகரித்து, வெளிநாட்டு முதலீட்டையும் குறைப்பதால் இலங்கையின் பொருளாதாரம் வெகுவாகப்பாதிப்புறுகிறது. உல்லாசப்பயணப் பாதிப்பு இதற்கு நல்லதொரு உதாரணமாகும்.

இவை மாத்திரமல்ல அரசாங்கம் மானியமுறையிலும் இலவசமாகவும் வடபகுதி மக்களுக்கு உணவு விநியோகிக்கிறது. தற்போதைய போர் நடவடிக்கையால் பாதிப்புற்றோருக்கு இதைச் செய்யவேண்டிய கட்டாயமும் உண்டு. ஆனால் போரோடு சம்பந்தப்பட்ட இந்தஉணவு விநியோகம் வீணே அரசின் செலவினத்தை அதிகரிக்கின்றது. இராணுவச் செலவினத்துக்கு அப்பால் நடக்கும் இச்செலவைப்பற்றி யாரும் பேசுவதோ கணக்கில் கொள்வதோ குறைவு ஆனால் போரால்தான் இச் செலவுகள் ஏற்படுகின்றன என்பது உண்மை.

போரினால் உற்பத்தி மாத்திரம் பாதிப்புறுவதில்லை. இராணுவ தளபாடங்கள் பெறுவதில் ஏற்படும் செலவும் அதனால் பொருளாதாத்தில் ஏற்படும் பாதிப்புகளும் அளவிடமுடியாத பாதிப்பை ஏற்படுத்தி நாட்டின் அபிவிருத்தியையும், பொருளாதார முன்னேற்றத்தையும் வெகுவாகப் பாதிப்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். (பூ)

# "அடுத்த சந்ததியினர் வாழ எமது இளைஞர்கள் உயிரிழக்கிறார்கள்"

**- அருண் மாஸ்டர்**

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப் போரானது உலகப்பிரசித்தி பெற்றது. சகலரும்அதிசயிக்கும் உக்கிரமானபோர் இப்போரில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு இளைஞனும் தான் மரணிப்பது நிச்சயம் என்று தெரிந்துகொண்டு தான் களத்தில் குதிக்கிறான். சவப்பெட்டிகளை, தேவையான விறகுகளை எடுத்து வைத்துவிட்டு மன உறுதியோடு செல்கின்ற எமது இளைஞர்களைப் பற்றி ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பண்டத்தரிப்புக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கல்விப்பொறுப்பாளர் திரு. அருண் மாஸ்டர் மேற்கண்டவாறு கூறினார்.

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்விஅலுவலக உதவிப்பணிப்பாளர் திரு. ப. சண்முகராஜா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில்;

வருங்காலச் சந்ததியினர் வாழவேண்டும் என்பதற்காகத் தலைவரின் ஆணைப்படி, இழக்கமுடியாத தமது உயிரைக் கொடுக்கின்றார்கள். இத்தகைய உறுதிபடைத்த இளைஞர்கள் இருக்கும்போது ஈழம் மலர்வது பற்றி யாருமே சந்தேகப்படவேண்டியதில்லை. ஈழம் மலர்ந்தே தீரும்.

ஆனையிறவுப் போரிலே வீரமரணமடைந்த ஐந்நூறு போராளிகளினதும் கனவுகள் நனவாக்கப்படவேண்டும். சகல இளைஞர்கள், யுவதிகள்' பெரியோர்கள் அனைவரும் எம்முடன் இணைந்து போராடவேண்டும். அதிபர்கள், ஆசிரியர்களும் எம்மோடு சேர்ந்து சகல துறைகளிலும் போராடவேண்டும் என்றார்.

பண்டத்தரிப்புக் கோட்டத்தைச் சேர்ந்த கொத்தணி அதிபர்கள் அனைவரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். [139)

# இராணுவத்தை விரட்டும்வரை ஆனையிறவுபோர் தொடரும்"

**— மூர்த்தி**

[கிளிநொச்சி]

"ஆனையிறவுபோர் முடிவடைந்துவிடவில்லை. ஸ்ரீலங்கா இராணுவம்இம்முகாமிலிருந்து அப்புறப்படுததப்படும் வரை இப்போர் தொடரும்" என்று கிளிநொச்சி கனகபுரத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசிற்றூரவை பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும் போது தமிமீழ விடுதலைப் புலிகள் இயக்க தமிழீழ அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி குறிப்பிட்டார்.

சியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இலக்கியன் தலைமையில் இககூட்டம் இடம்பெற்றது.

திரு. மூர்த்தி மேலும் பேசுகையில்; ஆனையிறவு போர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பெரும் போராகும். இவ்வாறான போரை இரு நாட்டுப் படைகளும் சந்தித்தது இதுவே முதல்தடவையாகும்.

16 யுத்த விமானங்களின் குண்டுமாரி ஒரு புறமும் பல்லாயிரக்கணக்கான சிங்கள படைகள் மறுபுறமுமாக நாள் ஒன்றிற்கு இரண்டு கோடி ரூபா செலவுசெய்து இப்போரில் ஸ்ரீலங்கா அரசு படைகள் ஈடுபட்டன, இதே வேளை வெட்ட வெளியில் எமது படையினர் மிகவும் வீரத்துடனும் தீரத்துடனும் பிரமிக்கத்தக்க வகையிலும் இப்போரை மிககுறைந்த தொகையினரைக் கொண்டு சாதனை நிலைநாட்டியுள்ளனர்.

தமிழன் பயந்தவன் இல்லை. தமிழனுக்கு பயம் இருக்கவே கூடாது. இந்த மண்ணில் தமிழன் அடிமை இல்லை" என்றார்.

## நின்னருளைத் தந்துவிடு...

அரக்கர் செருக்கழித்து
அமரர் குலம் காத்த
திருக்கைவேற் படைத் தலைவா
தீந்தமிழின் எழிற் குமரா
தருக்கர் கொடுமைகள்
தானழித்துத் தமிழ் ஈழம்
பிறக்க வரந் தருவாய்
பீடு துயர் நீக்கிடுவாய்!

பிச்சை எடுத்து மெம்
பிறந்த மண்ணைப் பாழ்படுத்த
உச்சிமீது வானிருந்து
உதிர்க்கும் குண்டு வீழ்ந்திடினும்
அச்சமில்லை என்று களம்
ஆடிவரும் தமிழர் படை
நிச்சயமாய் மண் மீட்கும்
நின்னருளைத் தந்துவிடு.

- நெடுந்தீவு லக்ஸ்மன்

# பட்டரியுடன் வந்த பயணிகளின் உடமைகள் வவுனியாவில் பறிமுதல்

[வவுனியா]

பட்டரிகளை எடுத்து வந்த பயணிகளின் உடமைகள் வவுனியாவில் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருட்களில் ஒன்றான பட்டரியை எடுத்துவந்தமூவர் தாண்டிக்குளம் தடைமுகாமில் படையினரிடம் சிக்கிக் கொண்டனர்.

இதனால் அவர்களது பொருட்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டது. மேலதிக விசாரணைக்காக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் தமது சொந்தத் தேவைக்கு இரண்டு பட்டரிகளை கொண்டு செல்வதாகக் கூறி சோதனையின்முன் காட்டியபோது அவரது சைக்கிள் உட்பட சகல பொருடகளும் பறிமுதல் செய்யப்பட்டன. ஆனால் அவர் தொடர்ந்து வடபகுதிசெல்ல அனுமதிக்கப் பட்டார்.

# "எமது மண்ணைக் காக்க தமிழ் இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் முன்வர வேண்டும்"

**- பிரசாந்த்**

(யாழ்ப்பாணம்)

"இன்று நடப்பதோ தன்மான யுத்தம். தமிழர்கள் இந் நாட்டிலே வாழ்வதா சாவதா என்பதனைத் தீர்மானிக்கின்ற யுத்தம். இந்நேரத்தில் இளைஞர்கள், யுவதிகள் போராட்டக்களத்தில் குதித்து தமிழர்கள் தன்மானத்துடன் வாழ இம்மண்ணைக் காக்க முன்வர வேண்டும்."

இவ்வாறு தென்மராட்சி கல்வயலில் இடம்பெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு பிரசாந்த் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

ஆனையிறவிலே கடலிலே இருக்கும் கடற்படைப் பீரங்கிப் படகுகள் 24 மணி நேரமும் எமது போராளிகளின் எல்லை மீதிலே நிமிடத்துக்கு நிமிடம் எறிகணைத் தாக்குதலை மேற்கொள்கின்றனர். வானிலே பறக்கின்ற இராட்சத விமானங்கள் எமது எல்லையின் மீதிலே தனது கண்மூடித்தனமான விமானத் தாக்குதலை மேற்கொள்கின்றன. தரையிலே இறக்கப்பட்ட 8 000க்கும் மேற்பட்ட இராணுவமும் தனது கையில் இருக்கும் துப்பாக்கிளினால் 24மணிநேரமும் எமது போராளிகள் மீது ரவைகளை ஏவிக் கொண்டிருக்கின்றன. இம் முப்படைகளுக்கு எதிராக உங்களுடைய பிள்ளைகள் காலாட் படையினரால் ஒரு மிகப் பெரிய யுத்தத்தைத தொடுத்தனர். எமது போராளிகள் 24 மணி நேரமும் யுத்தகளத்தை சந்தித்தனர். ஒரு நிமிடம்கூட சளைக்காது எதிரி எமது மண்ணைப் பறிக்கக்கூடிய நிலையில் 24 நாட்களாகப் போரிட்டனர்.

# புலிகளுக்குவெற்றிவேண்டி பூநகரியில் தல யாத்திரை

[பூநகரி]

வீரமரணமடைந்த போராளிகளின் ஆத்ம சாந்திக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் இலட்சியம் நிறைவேறும் பொருட்டும் மாபெரும் தல யாத்திரை கடந்த வெள்ளிக்கிழமை கறுக்காய்தீவு கல்வெட்டுத்திடல் கந்தசுவாமி கோயிலில் வைத்து பூநகரி முழங்காவில் அரசியல்பொறுப்பாளர் திரு. ரவிராஜினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது

இத் தலயாத்திரைக் குழுவினர் ஞானிமடம். கொட்டிலுப்பிள்ளையார், சித்தங்குறிச்சி முருகமூர்த்தி. கம்பவி வைரவர். கோபாலபிட்டி பிள்ளையார், வாடியடி முனீஸ்வரன். கரிக்கோட்டுக்குளம் கந்தசுவாமி கோயில், பள்ள

(4ம் பக்கம் பார்க்க)

கச்சதீவு விவகாரம்:

# ஜெயலலிதாவின் கோரிக்கை

# இலங்கை அரசால் நிராகரிப்பு

[புதுடில்லி]

கச்சதீவை மீண்டும் இந்திய அரசு திரும்பபெற்றுக்கொள்ள வேண்டுமென்ற தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

இந்தியாவுக்கு சொந்தமான கச்சதீவை 1974ம் ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் இந்திரா காந்தி இலங்கைக்கு கையளித்தார். தற்போது இத்தீவு இலங்கைக்கு சொந்தமாக இருப்பதால் தமிழக மீனவர்கள் சொல்லொணுபிரச்னைகளை எதிர்கொள்கின்றதால் இந்திய அரசு இத்தீவை இலங்கையிடமிருந்து திரும்பப்பெற வேண்டுமென்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [மா]

# இலங்கைப் போராளிகளின் நடவடிக்கைக்கு அனுமதி இல்லை

- மாதவசிங் சோலங்கி

(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. மாதவ் சிங்சோலங்கிக்கும் இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு. ஹரல்ட் ஹேரத்துக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பேச்சுக்களில் இனப்பிரச்சனைத் தீர்வு குறித்து திரு. ஹேரத் திரு. சோலங்கியிடம் கூறியதுடன் பிரச்சனையைத் தீர்க்க நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்நுள்ளதாகவும் தெரிவித்தார்

இதேவேளை இந்திய மண்ணில் இலங்கைப் போராளிகளின் நடவடிக்கைக்கு அனுமதியளிக்க முடியாதென்று திரு. சோலங்கி திரு. ஹேரத்திடம் தெரிவித்துள்ளார். [சி]

## இடைநிறுத்தம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை மத்திய வங்கி இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

## புலிகளை தேட

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அழைத்துச் செல்கின்றனராம்.

புலிகள் கைதுசெய்யப்படும் பொழுது 'சயனைட்' உட்கொண்டு தற்கொலை செய்து கொள்கிறார்களாம். இதனால் அவர்களை உயிருடன் பிடிப்பதற்கே வைத்தியர்கள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்

கைதாகும் ஒருவர் 'சயனைட்' உட்கொண்டால் அவருக்கு உடனடியாகமருத்துவசிகிச்சை அளித்து, அவரை உயிருடன் பிடிக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## அமைச்சர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தில் வைத்து தாக்கப்பட்டதையடுத்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## புலிகளுக்கு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுவான் பிள்ளையார் கோயில், பத்தினியாகாடு பிள்ளையார் கோயில் ஆகிய இடங்களுக்குச் சென்றபின் செட்டியகுறிச்சி திகிரி விநாயகராலயத்தில் விசேட பூசையுடன் தலயாத்திரை முடிவுறறது; [23]

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம்இராமநாதன் கல்லூரியில் பாடசாலைகளில் மரவேலை, உலோக வேலை, நெசவு, வனைதல், வானொலி பேணல், மோட்டார் பொறித்தொழில் கற்பிக்கும் ஆசிரியருக்கான கருத்தரங்கு இன்று 19-ம்திகதியும், அடுத்து நாளையும், நாளை மறுநாளும் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-30மணி வரை நடைபெறும்.

## கறுப்புக்கொடி

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

அவர் மேலும் தெரிவிக்கையில்; மாற்றுக் கட்சியினர் குறை சொல்லாதவண்ணம் அ.தி.மு.க, தொண்டர்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டும்.

திருச்சியில் திரு. ப. சிதம்பரம் தாக்கப்பட்ட சம்பவத்திற்கும், எங்கள் கட்சிக்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது: எங்கள் கட்சி மீதும், கட்சித் தொண்டர்கள் மீதும் சுமத்தப்பட்ட விஷமத்தனமான குற்றச்சாட்டு இது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளையில் செல்வி ஜெயலலிதாவின் மேற்படி அறிவிப்பைத் தாம் வரவேற்றுள்ளதாக மதுரை விமான நிலையத்தில் அமைச்சர் சிதம்பரம் நேற்றுத் தெரிவித்தார். (க)

# பொருளாதாரத் தடையை எதிர்த்து பூநகரியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[பூநகரி]

சிறிலங்கா அரசினால் விதிக்கப்பட்டிருக்கும் பாரிய பொருளாதர தடையை எதிர்த்து பூநகரியில் எதிர்வரும் 23ம் தேதி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறவுள்ளது.

இந்த ஊர்வலத்தில் சிற்றூரவை, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், கூட்டுறவு ஊழியர்கள், வர்த்தக சங்கத்தினர், பொதுஸ்தாபனங்கள் பங்குபற்றும் இந்த ஊர்வலம் காலை 8 மணிக்கு பரமன்கிராய் ஆலடியில் ஆரம்பித்து வாடியடியில் முடிவடையும்.

வாடியடி சந்தை மைதானத்தில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெறும். (23)

## வீரவணக்கம்

கடந்த மாதம் 21ம் திகதி கட்டைக்காட்டில் நடைபெற்ற மோதலில் அன்ரனி (வல்லிபுரம் பிரதாபன், புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரம், கல்வியங்காடு), ரவி (கனகசபை ரவீந்திரன், புத்தூர் கிழக்கு, புத்தூர்) ஆகிய வீர வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

## கர்நாடகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'சயனைட்' விழுங்கிய வேறு ஐந்துபேரும் பிடிபட்டு சிகிச்சைக்காக பெங்களூர் மருத்துவமனையில் சேர்க்கபபட்டுள்ளனர்.

தேடுதல் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். சென்னையில் இருந்து சிறப்புப் புலனாய்வுப் பிரிவினரும் அங்கு சென்றுள்ளனர்.

## அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டம்

[பூநகரி]

கிளிநொச்சி மாவட்ட நிர்வாக அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டம் எதிர்வரும் 22-ம் திகதி வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு செயலக மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் சகல மாவட்ட விவசாயக்குழு அங்கத்தவர்கள் மாவட்டத்திணைக்கள அதிகாரிகள் மாவட்ட கூட்டுத்தாபன அதிகாரிகள் கலந்துகொள்வார்கள். (23)

## போராளிகள் கைது

[சென்னை]

ஒரு பெண் உட்பட மூன்று இலங்கைத் தமிழ் போராளிகள் நேற்று முன்தினம் திருச்சி மாவட்டம் கருவூர் அருகே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வீடு ஒன்றை சோதனையிட்டபோதே மேற்படி மூன்று பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வயர்லெஸ், வானொலிப் பெட்டி, துப்பாக்கி ரவைகள், வெடிமருந்துப் பொருட்கள், 62 ஆயிரம் ரூபா இந்திய நோட்டுக்கள் என்பன இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். [க]

## அடுத்த

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வடபகுதியில் கணிசமான அளவு தொடர்ச்சியாக பல இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் மேலும் கூறினர்

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காகவே இந்நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## றெனிடிமெல்லின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் இடமளிப்பதற்காக முன்னாள் நிதியமைச்சர் றெனிடிமெல் தனக்குகீழ் செயற்பட்ட வங்கித் தொழில் கமிட்டி நாணயசபை ஆகியவற்றின் முடிவுகளிலும் தலையிட்டார் எனறும் இந்த விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

## சிவராஜன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக 'இந்தியா ருடே' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

இக்கொலை தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட புலனாய்வுக் குழுவினரின் தாமதமான செயற்பாடுகளாலேயே குற்றவாளி தப்பியோடிவிட்டதாக 'இந்தியா ருடே' குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேவேளை, சிவராஜனின் உண்மைப் பெயர் ராஜா அருமைநாயகம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மாணவர் உணவு முத்திரை

[யாழ்ப்பாணம்]

"உலர் உணவுப் பொருள்கள் போதிய அளவில்பாடசாலை உணவுமுத்திரைக்கு வழங்கப்படாத காரணத்தினல் பாடசாலை மாணவர்களுக்கு வெளிச்சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களே வழங்கப்பட்டன. ஆகவே உணவு முத்திரையில் பெரும்மோசடி என்ற விடயத்தை மறுக்கிறோம்'' என்று வேலணை ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு. பொ. நடராஜா தெரிவித்துள்ளார்.

இதேவேளை வேலணை ப. நோ கூ: சங்க மண்டைதீவு கிளையில் வேலணை ப. நோ. கூ. சங்க அறிவுறுத்தல்படியே மாணவர் உணவு முத்திரைக்கு பொருள்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சிட்னியில் துப்பாக்கி சூடு எட்டுப் பேர் பலி

(சிட்னி)

அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னி நகரில் சனநெருக்கடி மிக்க கடைத்தொகுதிகள் நிறைந்த பகுதியில் ஒருவர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 8 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து மக்கள் பீதியினால் அந்த இடத்தைவிட்டு ஓடினர்கள். கொலையாளி வாகனங்கள் நிறுத்தும் பகுதிக்குச் சென்று தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [மா]

## சடலங்கள் யாவும் மீட்பு

(புதுடில்லி)

இம்பாலில் அண்மையில் இடம்பெற்ற விமான விபத்தில் கொல்லப்பட்ட 69 பேரின் சடலங்களும் மீட்கப்பட்டதாக இந்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா லோக்சபாவில் நேற்றுத் தெரிவித்தார். (க)

## முள்ளியானில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றதாக இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இருதரப்பினரிடையேயும் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றதாகவும் ஆனாலும் இருதரப்பிடையேயும் சேதம் ஏற்பட்டதற்கான தகவல் இதுவரையில் கிடைக்கவில்லை யென்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

## திருச்சியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டப்பட்டு மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டோரில் இருவர் இலங்கைத் தமிழ்ப் போராளிக்குழு ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்றும் மற்றையவர் தமிழகத்தை சேர்ந்தவர் எனவும் அறியப்படுகிறது.

மேற்படி தகவல் தொடர்பு மையம் நீண்டகாலமாக செயற்பட்டு வந்ததது என்றும் இது சம்பந்தமாக பொலிசாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து தகவல் மையம் முற்றுகையிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

## மனித உரிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிஷ் அரசு முடிவு செய்திருப்பதாக பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலாளர் டக்ளஸ் ஹேட் தெரிவித்தார்.

இலங்கையுடன் பர்மா, சூடான், சோமாலியா ஆகிய நாடுகளுக்கான உதவிகளையும் பிரிட்டிஷ் அரசு நிறுத்தியுள்ளது.

மூன்றும் உலக நாடுகளுக்கு பின்வரும் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசு நிதி உதவி வழங்குகிறது என திருமதி சோக் தெரிவித்துள்ளார்.

பொருளாதார சமூக கொள்கை சரியான விதத்தில் நிர்வகிக்கப்பட வேண்டும். ஊழலற்ற நிர்வாகம் இருப்பதுடன் ஒழுங்கு முறைப்படி தேர்தல்களும் நடத்தப்படவேண்டும். மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து அவை உரியமுறையில் பேணப்படவேண்டும்.

## விவசாயிகள் கவனத்திற்கு

[வட்டுக்கோட்டை]

தமிழீழ ஆய்வு நிறுவனம் விவசாயிகளின் நன்மை கருதி 7 விதமான விதை நெல் இனங்களைச் சிபார்சு செய்துள்ளது.

விவசாயிகள் இத்தகைய நெல் இனங்களை விதைப்பதன் மூலம் அதிக விளைச்சலைப் பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்றைய காலபோகத்திற்கு இந்த நெல் இனங்களே பொருத்தமானவை என்றும், இவை பற்றி அவ்வப் பிரிவுக் கிராமசேவை அலுவலர்கள், கிராமிய உற்பத்திக் குழுவினர்களைச் சந்தித்து அறிந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## அவசர கூட்டம்

[யாழ்ப்பாணம்]

பாடசாலைகளின் உடனடித் தேவைகள் பற்றியும், அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும்கலந்துரையாடுவதற்காக பண்டத்தரிப்பு, யாழ்ப்பாண கல்விக்கோட்ட பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்க செயலாளர்களையும், பொருளாளர்களையும், அதிபர்களையும் உள்ளடக்கிய அவசர கூட்டங்கள் நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பண்டத்தரிப்பு கோட்டத்திற்கும், நாளை மறுதினம் புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு யாழ் கோட்டத்திற்கு யாழ்ப்பாண சாதனா பாடசாலையிலும் இக் கூட்டங்கள் நடைபெறும்.

## இந்தியாவில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும் என்று பாரதீய ஜனதா கட்சி மத்திய அரசைக் கேட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கும் தமிழகத்தில் இயங்கும் தீவிரவாதக் குழுக்களுக்குமிடையில் நிலவும்தொடர்புகள்குறித்தும் மத்திய அரசு விசாரணைகள் மேற்கொள்ள வேண்டுமெனவும்பாரதீயஜனதாகட்சித் தலைவர் மத்திய அரசைக்கேட்டுள்ளார். (க)

## போரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா இவ்வாறு தெரிவித்தார்

அண்மையில் கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது: யாழ். குடாநாட்டை நோக்கி நாம் முன்னேறுவோம்; அதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்றார்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.